
# இயல் 6.6 - தகவல் செயலாக்கம்

பயிற்சி எண் :: 6.6.1.2.F

கட்டமைப்பு அணுகுமுறை - வடிவங்களின் எண்ணிக்கையை கணக்கிடல் - பயிற்சி

## கட்டமைப்பு அணுகுமுறை - வடிவங்களின் எண்ணிக்கையை கணக்கிடல் - பயிற்சி




இங்கே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் எத்தனை சதுரங்கள் இருக்கின்றன?

**தீர்வின் படிகள்**


1. கொடுக்கப்பட்டுள்ள சதுரங்களின் எண்ணிக்கை = 7.
2. அந்த 7 சதுரங்களையும் இரு நேர்குத்துக்கோடுகள் ஒன்று சேர்ந்து 4 சதுரங்களாக வெட்டுகின்றன. எனவே நேர்குத்துக்கோடுகள் உருவாக்கும் மொத்த சதுரங்கள் = $7 \times 4 = 28$.

எனவே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள மொத்த சதுரங்கள் = $7 + 28 = 35$.

---




1 முதல் 7 வரை உள்ள எண்களைக்கொண்டு ஒரு கோட்டில் அமைந்துள்ள 3 வட்டங்களின் கூட்டுத்தொகை ஒரே எண்ணாக வரும் விதத்தில், வட்டங்களை நிரப்புக.





**தீர்வின் படிகள்**


1. கொடுக்கப்பட்டுள்ள எண்கள் 1 2 3 4 5 6 7 எனும் ஏழு எண்களாகும்.
2. அவற்றுள் நடுவில் உள்ள எண் 4 ஆகும். அதனைக்கொண்டு அமைப்பின் நடுவில் உள்ள வட்டத்தை நிரப்புக.
3. பாக்கி இருக்கும் எண்கள் 1 2 3 5 6 7. அதில் முதலும் இறுதியுமாய் இருக்கும் 1 மற்றும் 7 எனும் எண்களை எடுத்து எதிர் எதிர் இருக்கும் இரு வட்டங்களை நிரப்புக.
4. பாக்கி இருக்கும் எண்கள் 2 3 5 6. அதில் முதலும் இறுதியுமாய் இருக்கும் 2 மற்றும் 6 எனும் எண்களை எடுத்து எதிர் எதிர் இருக்கும் வேறு இரு வட்டங்களை நிரப்புக.
5. மீதம் இருக்கும் எண்கள் 3 5. அவற்றைக்கொண்டு கடைசியில் உள்ள எதிர் எதிர் வட்டங்களை நிரப்புக.

எல்லா கோடுகளிலும் உள்ள 3 எண்களின் கூட்டுத்தொகை 12 ஆகும்.

---



இந்த அமைப்பில் எத்தனை வட்டங்கள் உள்ளன?




**தீர்வின் படிகள்**

1. காண்பதற்கு மிக சிக்கலாகத்தெரிந்தாலும் இதன் தீர்வு மிக எளிமையானதே.
2. அதில் உள்ள வட்டங்களை ஒவ்வொன்றாக எண்களை இட்டு கூட்டிக்கொண்டு வந்தால் நமக்கு வட்டங்களின் மொத்த எண்ணிக்கை கிடைத்துவிடும்.

இந்த அமைப்பில் உள்ள வட்டங்கள் 7 ஆகும்.

---

Sum & solution prepared on Saturday 25th September, 2021 :: 13:21 Hrs.

All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.